**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.11/2026 in O.S.186/2013**

ராமசந்திரன் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. காவேரி (இறந்தார்),
2. சரிதா,
3. அருண் முருகன்,
4. அருண்ராஜ்,
5. அனுஷா,
6. புனிதவதி,
7. செல்வநாதன்,
8. செந்தில்குமார்,
9. சார்பதிவாளர்,
   ஜெயங்கொண்டம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 14.08.2026 தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. மா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது தாவாவில் மனுதாரர்/ வாதி தரப்பில் முடிந்துபோன விசாரணையை மறுதிறப்பு செய்து உத்தரவாக வேண்டி மனுதாரர் தரப்பில் உ.வி.மு.ச. பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர் பெயரில் தாவா தொடர்ந்துள்ளார் என்றும், இதில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை முடிவுற்று விவாதத்திற்கு வாய்தா உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் விசாரிக்க வேண்டிய முக்கிய சாட்சிகள் கிராமத்தில் சில நாட்கள் இல்லாததால் மேற்படி சாட்சியை கொண்டு வந்து தனது தரப்பில் விசாரிக்க முடியவில்லை

என்றும், தற்போது வெளியூரில் இருந்து வந்துவிட்டார் என்றும், அதனால் அவரை மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், மேற்படி சாட்சி மனுதாரர் கட்சியை நிரூப்பிக்க கூடிய முக்கியமான சாட்சியாகும் என்றும், ஆகையால் மனுதாரர்/ வாதி தரப்பில் முடிந்துபோன விசாரணையை மறுதிறப்பு செய்து உத்தரவாக வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதனை மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:**

3. மனுதாரரின் மனு சரியல்ல என்றும், மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டிய நபர் கிராமத்தில் சில நாட்கள் இல்லை என்றும், தற்போது தான் வெளியூரில் இருந்த வந்துள்ளார் என்று கூறி விட்டு மேற்படி நபரின் பெயர் மற்றும் விலாசம் கூட குறிப்பிடாமல் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், இதிலிருந்தே மனுதாரருக்கு அசல் வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதுவும், வழக்கை முடித்து தீர்ப்பு ஏற்பட்டு விடாமல் இருக்க வேண்டி கெட்ட எண்ணத்தில் தான் மனு தாக்கல் செய்துள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது என்றும், மனுதாரர் தரப்பில் சாட்சியங்களில் உள்ள Gap ஐ நிரப்புவதற்கும், குறுக்கு விசாரணையிலுள்ள முரண்பாடுகளை சரி செய்யவும் மனுதாரர் கூடுதல் சாட்சியை விசாரிக்க முயற்சி செய்வது சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானதாகும் என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சானறாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**பிரச்சனைக்கான தீர்வு:**

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை மற்றும் இருதரப்பு வாதங்கள் அசல்வழக்கு கோப்பு ஆகியனவற்றை பரிசீலனை செய்து பார்க்கையில் அசல் வழக்கில் வாதி வா.சா.1

ஆகவும், மோகன் என்பவர் வா.சா.2 ஆகவும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளனர், வா.சா.2 ன் குறுக்கு விசாரணை கடந்த 22.10.2025 ம் தேதியில் முடிவுற்ற நிலையில் மனுதாரர் / வாதிக்கு இதர சாட்சி விசாரணைக்காக 06.11.2025 மற்றும் 14.11.2025 ஆகிய தேதிகளில் வாய்ப்பு அளிக்கப்பட்டும் மனுதாரர் / வாதி தரப்பில் இதர சாட்சி முன்னிறுத்தப்படாத காரணத்தால் மனுதாரர் / வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. அதற்கு பிறகு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை கடந்த 01.08.2026 ல் முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது தற்போது வாதத்திற்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

8. மனுதாரர் தரப்பில், விசாரிக்க வேண்டிய ஒரு முக்கியமான சாட்சி விசாரணை நடைபெற்ற காலத்தில் ஊரில் இல்லாத காரணத்தால் அவரை விசாரிக்க இயலவில்லை என்றும், தற்போது அந்த சாட்சி ஊருக்கு வந்துள்ளதால் அவரை விசாரிக்க வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்க வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

9. இம்மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விசாரிக்கப்பட வேண்டியதாகக் கூறப்படும் சாட்சியின் பெயர், முகவரி மற்றும் இதர விவரங்கள் எதுவும் மனுவில் தெரிவிக்கப்படவில்லை என்றும், அந்த சாட்சி எந்த விஷயத்தை நிரூபிப்பதற்காக விசாரிக்கப்பட உள்ளார் என்பதும் குறிப்பிடப்படவில்லை என்றும், வாதி தரப்பு சாட்சியங்களில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கும் குறுக்கு விசாரணையில் உள்ள முரண்பாடுகளை சரிசெய்யவும் வாதி கூடுதல் சாட்சியை விசாரிக்க முயல்வதாகவும், வழக்கு வாதத்திற்காக வந்துள்ள இந்நிலையில் சாட்சியத்தை மீண்டும் திறப்பது வழக்கின் முடிவை தாமதப்படுத்தும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கில் வாதி தரப்பில் இரண்டு சாட்சிகள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பிரதிவாதி தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு, வழக்கு வாதத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் விசாரிக்க விரும்புவதாகக் கூறும் சாட்சியின் பெயர், முகவரி அல்லது அடையாளம் எதுவும் மனுவில் குறிப்பிடப்படவில்லை. அந்த சாட்சி எந்த குறிப்பிட்ட பொருண்மையை நிரூபிப்பதற்காக விசாரிக்கப்பட உள்ளார்

என்பதும் தெரிவிக்கப்படவில்லை. சாட்சி முக்கியமானவர் என்று பொதுவாகக் கூறுவது மட்டும், வழக்கு வாதத்திற்காக வந்துள்ள நிலையில் சாட்சியத்தை மீண்டும் திறப்பதற்குப் போதுமான காரணமாகக் கருத முடியாது.

11. மேலும், அந்த சாட்சி விசாரணை நடைபெற்ற காலத்தில் ஊரில் இல்லை என்று கூறப்பட்டுள்ளதே தவிர, அவர் எங்கு இருந்தார், எந்த காலகட்டத்தில் இல்லாமல் இருந்தார், அவரை முன்னதாக விசாரணைக்கு அழைக்க மனுதாரர் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன, அவரை முன்னதாக விசாரிக்க இயலாததற்கான குறிப்பிட்ட மற்றும் நம்பத்தகுந்த காரணம் என்ன என்பவை மனுவில் விளக்கப்படவில்லை.

12. இவ்வழக்கில், மனுதாரர் தரப்பில் ஏற்கனவே சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பிலும் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு வாதத்திற்காக வந்துள்ளது. இந்நிலையில், யார் அந்த சாட்சி என்பதையே தெரிவிக்காமல், அவர் முக்கியமான சாட்சி என்ற பொதுவான காரணத்தை மட்டும் முன்வைத்து சாட்சியத்தை மீண்டும் திறக்க கோரப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள காரணம் போதுமானதாகவும் நம்பத்தகுந்ததாகவும் இல்லை.

13. எனவே, இம்மனு வழக்கின் இறுதி கட்டத்தில் சாட்சியத்தை மீண்டும் திறப்பதற்கான ஒரு முயற்சியாகவே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. ஆகையால், மனுதாரர் தரப்பில் சாட்சியத்தை மீண்டும் திறப்பதற்கான போதுமான காரணம் நிரூபிக்கப்படாததால், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**

– இல்லை –

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.